# பாடம்- 26 ஆசரிப்புக் கூடாரம் (யாத் 33-34,40)

விசுவாசிகளின் மற்ற எல்லாத் தேவைகளைக் காட்டிலும், மிக முக்கியமானது எது? ஆராதிக்க ஒரு இடமா? விசுவாசிக்கும் ஜனங்கள் கூடி ஆராதிப்பதா? சரியான முறையில் ஆராதனை செய்து அவர்களை வழிநடத்தக் கூடிய ஒருவரா? எல்லாமே சரி தான். ஆனால் ஜனங்களை வழிநடத்த ஒருவர் இல்லையென்றால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை மோசே நன்கு அறிந்திருந்தான் என்பதை பற்றி இந்த பாடத்தில் கற்றுக் கொள்ளப் போகிறோம்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு பொன் கன்றுக்குட்டியை உண்டாக்கி, தொழுது கொண்டதால், மோசே அவர்களுக்காகப் பரிந்து பேச வேண்டியதாயிற்று. கர்த்தருடைய புஸ்தகத்திலிருந்து தன் பெயரை கிறுக்கிப் போடும்படியும் அவன் தேவனிடம் கேட்டுக் கொண்டான். ஆனால் கர்த்தரோ மோசேயை தண்டிக்கவில்லை, அதற்கு பதிலாக பாவம் செய்ததால் ஜனங்கள் மீது வாதையை அனுப்பினார்.

பின்னர் கர்த்தர் மோசேயை நோக்கி, “நீ அழைத்துக் கொண்டு வந்த ஜனங்களை கூட்டிக்கொண்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்டுக் கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்கு போங்கள். நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, உங்கள் சத்துருக்களை துரத்திவிடுவேன். ஆனாலும் வழியிலே நான் உங்களை நிர்மூலம் பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன். நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்” என்றார்.

ஆதலால் மோசே கீழே இறங்கி, ஜனங்களிடம், “கர்த்தர் அவர்களுடனே வாசம் செய்ய மறுத்தார்” என்று சொன்னான். அவர்கள் மனமுடைந்து, துக்கித்து அழுதார்கள். தங்கள் பாவத்தின் விளைவு மிகவும் அதிகமாயிருந்ததினால், துக்கமடைந்து புலம்பினார்கள்.

மோசே கூடாரத்திற்கு வெளியே சென்று, முன்பு செய்தது போலவே கர்த்தருடன் பேசுவதற்கு ஆசரிப்பு கூடாரத்தை பாளையத்திற்கு புறம்பே அமைத்தான். மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையில், மேகஸ்தம்பம் இறங்கி, கூடார வாசலிலே நிற்கும். கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசிக்கொண்டிருந்த பொழுது, ஜனங்கள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் தங்கள் கூடாரங்களின் வாசலில் பணிந்து கொண்டார்கள்.

மோசேயின் பணிவிடைக்காரனாகிய யோசுவா என்ற வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்திலேயே தங்கியிருந்தான்.

மோசே கர்த்தரை நோக்கி, "நீர் என்னைப் பேர் சொல்லி அழைத்ததுண்டானால், உம்முடைய கண்களில் எனக்கு கிருபை உண்டென்றால், உம்முடைய வழியை எனக்கு கற்பியும். இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும். உம்முடைய சமூகம் என்னோடே கூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்.

நீர் எங்களுக்கு முன்பாகச் செல்லவில்லை என்றால், உலகத்திலுள்ள மற்ற ஜனங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடக் கூடும்!" என கெஞ்சினான். கர்த்தர் இல்லாமல் மோசேயினால் இந்தக் கடினப் பயணத்தை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அவர் பிரசன்னம் மோசேக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நேரம் முதல் காண்பிக்கப்பட்டது.

கர்த்தர் பிரதியுத்தரமாக, ''நீ சொன்ன இந்த வார்த்தையின் படியே செய்வேன். என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது. உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன்'' என்றார். பின்னும் கர்த்தர் மோசேயிடம், ''முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக் கொண்டு சீனாய் மலைக்கு வா. நீ உடைத்துப் போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்'' என்றார்.

சீனாய் மலையிலே, கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, “நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்’, ‘யெகோவா’ என்பது என் நாமம். கர்த்தராகிய நான் இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன், இதுவே, நான் உன்னோடு செய்யும் உடன்படிக்கை.

பெரிய அதிசயங்களினால் நான் நம்பிக்கையற்ற ஜாதிகளை கானானிலிருந்து துரத்தி விடுவேன். ஆனால் நீ என் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். அந்நிய தேவர்களை பணிந்து கொள்ள வேண்டாம். அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை இடித்து போடுங்கள். ஏனென்றால் நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன” என்றார். (யாத் 34:6-14)

மோசே மலையின் மேல் தங்கி, கர்த்தருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் எழுதினான். இரண்டு கற்பலகைகளில் அவன் பத்து கட்டளைகளையும் எழுதினான். அவன் 40 நாள் அளவும் அங்கே தங்கியிருந்தான். அப்பங்களை சாப்பிடவும் இல்லை, தண்ணீரை குடிக்கவும் இல்லை. அதன் பிறகு, கர்த்தரின் கட்டளைகளோடு அவன் ஜனங்களிடத்திற்கு இறங்கிப் போனான்.

கர்த்தரோடு அவன் வெகு நேரம் செலவழித்ததினால், அவன் முகம் பிரகாசித்திருப்பதை அறியாதிருந்தான். இஸ்ரவேல் புத்திரர் அவன் முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு பயந்ததினால், மோசே அவர்களோடே பேசி முடியுமளவும், தன் முகத்தின் மேல் முக்காடு போட்டிருந்தான். ஆனால் கர்த்தருடைய சந்நிதியில் அவரோடே பேசும்படிக்கு உட்பிரவேசித்தது முதல் வெளியே புறப்படும் மட்டும் முக்காடு போடாதிருந்தான்.

மோசே சபையார் அனைவரையும் கூடிவரச் செய்து அவர்களிடம், “தேவன் கட்டளையிட்டது என்னவென்றால் தான் தங்குவதற்கு பரிசுத்த ஸ்தலமாகிய ஒரு ஆசரிப்பு கூடாரம் கட்டப்பட வேண்டும். கர்த்தர் அங்கே நம்முடனே சஞ்சரிக்க உறுதி அளித்துள்ளார். நீங்கள் அனைவரும் உங்கள் விருப்பப்படி காணிக்கையாக பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்பு நூலும், மெல்லிய பஞ்சு நூலும், வெள்ளாட்டு

மயிரும், சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், சீத்திம் மரமும், எண்ணையும், பரிமளவர்க்கங்களும், சுகந்தவர்க்கங்களும், கோமேதகம் முதலிய இரத்தினங்களை கொண்டு வந்து செலுத்துங்கள்'' என்றான்.

எல்லாவற்றிலும் தேர்ந்த கைவினை கலைஞர்கள் தாங்களே முன் வந்து இந்த ஆசரிப்புக் கூடாரத்தை கட்டி முடிக்க தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். அதின் கூரையை சுற்றியுள்ள வாசஸ்தலங்கள், தகன பலிபீடம், வெண்கலச் சல்லடை, அதின் தொட்டி மற்றும் மரச்சாமான்கள் உட்பட எல்லாமே உள்ளே அமைய பெற்றிருக்க வேண்டும்.

மறுநாள், ஜனங்கள் அனைவரும் ஆசரிப்புக் கூடார கட்டுமானப்பணிக்கு தேவையான பொருட்களை கொண்டு வர ஆரம்பித்தார்கள். திறமைமிக்க கலைஞர்களான வடிவமைப்பாளர்கள், நெசவாளர்கள், சிற்பிகள் மற்றும் கட்டுமான வேலை செய்பவர்கள் ஆசரிப்பு கூடாரத்தை கட்ட முன் வந்தனர். கர்த்தர் பெசலெயேல் மற்றும் அகோலியாப் ஆகிய இரண்டு வேலையாட்களையும் தேர்ந்தெடுத்து, தமது ஆவியால் நிரப்பி, விநோதமான வேலைகளைச் செய்ய எழுப்பினார்.

நாளுக்கு நாள், ஜனங்கள் அவர்களுடைய பொன்னாபரணங்கள், வெள்ளி மற்றும் வெண்கலங்களை கொண்டு வந்து கொண்டே இருந்ததால் மோசே, ''காணிக்கைகளை கொண்டு வருவதை நிறுத்துங்கள். தேவைக்கு அதிகமாகவே இங்கே இருக்கிறது'' என்றான்.

ஜனங்கள் ஆசரிப்புக் கூடாரத்தைக் மோசேயிடம் கர்த்தர் சொன்னதை போலவே மிகவும் ஜாக்கிரதையாக செய்தார்கள். கர்த்தர் சகல விசித்திரமான வேலைகளை செய்யும்படிக்கு வேலைக்காரர்களை சகலவித திறமையினாலும், புத்தியினாலும், அறிவினாலும், ஞானத்தினாலும் நிறைத்தார். அங்கே வடிவமைப்பாளர்கள், நெசவாளர்கள், பூ தையல் வேலை செய்பவர்கள் இருந்தனர் மற்றும் நூல் நூற்கக்கூடிய மற்றும் வெள்ளாட்டு மயிரை திரிக்கின்ற ஞான இருதயமுள்ள ஸ்திரீகளும் இருந்தனர்.

ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலம் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும் கேருபீன்களுள்ள விநோதமான வேலையாக செய்யப்பட்டது.

வாசஸ்தலத்தின் மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டுமயிரினால் நெய்த மூடுதிரைகளையும், பின்னர் சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாரத்துக்கு ஒரு மூடியும் உண்டுபண்ணப்பட்டது. கடைசி அடுக்கு தகசுத் தோலினால் உண்டாக்கப்பட்டது. தீரைச்சீலையை உண்டு பண்ணி, அதற்கு சீத்திம் மரத்தினால் நூலு தூண்களைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளின் கொக்கிகளைப் பொன்னினால் பண்ணி, அவைகளுக்கு நான்கு வெள்ளிப்பாதங்களும் வார்ப்பிக்கப்பட்டது.

அந்த ஆசரிப்புக் கூடாரமானது, பரிசுத்த ஸ்தலமாகவும் மகா பரிசுத்த ஸ்தலமாகவும் பிரிக்கப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் சாட்சியின் பெட்டியும் மற்றும் உட்புறமும் வெளிப்புறமும் தங்கத்தினால் பூசப்பட்ட மேஜையும் வைக்கப்பட்டது. மேற்பரப்பு சாட்சியின் பெட்டியில் இரண்டு பொன் கேருபீன்கள் ஒன்றுக் கொண்டு எதிரிடையாக இறக்கைகள் விரித்தபடி இருந்தது. கட்டளைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் அதில் உட்புறமாக வைக்கப்பட்டிருந்தது.

ஆசரிப்புக் கூடாரத்தை ஒரு திரைச்சீலை இரண்டாக பிரித்தது. பரிசுத்த ஸ்தலத்தில் மரத்தினால் செய்யப்பட்ட மேஜையின் மீது சமூகத்து அப்பங்கள், எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் குத்து விளக்கு, மற்றும் கர்த்தருக்கு சுகந்த வாசனையை தருகிறதற்கு பொன் தூபபீடமும் வைக்கப்பட்டிருந்தது. எல்லா மரப்பொருட்களும் தங்கத்தினால் பூசப்பட்டு, அதில் கொக்கிகள் வைக்கப்பட்டு அதினுடனே தூண்கள் பொறுத்தப்பட்டு எதிரிடையாகச் செல்லும். இவைகள் மேஜையை தொடாமல் தூக்கி செல்வதற்கு உதவிச் செய்யும்.

ஆசரிப்புக் கூடாரத்தை சுற்றி செவ்வக வடிவிலான வேலி திரைகளால் உண்டாக்கப்பட்டு 23 மற்றும் 46 மீட்டர் (75-150 அடி) பரப்பளவில் சுற்றிலும் அமைக்கப்பட்டது. இந்த பிரகாரத்தில் மிருகங்களை தகனபலியிடுவதற்காக வெண்கல பலிபீடமும் மற்றும் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக தங்கள் கைகளையும் கால்களையும் கழுவதற்கு ஒரு வெண்கல தொட்டியும் வைக்கப்பட்டிருந்தது.

ஆரோனிற்கும் அவன் குமாரர்களுக்கும் விசேஷ உடைகளை ஜனங்கள் தயாரித்து கொடுத்தனர். இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வந்து சரியாக இரண்டு வருடங்களில் ஆசரிப்புக் கூடாரத்தை செய்து

முடித்தனர். மோசே அந்த வேலைகளையெல்லாம் பார்த்து கர்த்தர் கற்பித்தபடியே செய்திருந்ததினால், அவர்களை ஆசிர்வதித்தான்.

மோசே ஆசரிப்புக் கூடாரத்தை கர்த்தர் சொன்னபடியே செய்து, அபிஷேகம் பண்ணினான். அப்பொழுது அது கர்த்தருக்கு மகா பரிசுத்தமானதாயிருந்தது. பின்னர் ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது. ஜனங்கள் பார்த்து கொண்டிருக்கும் போது, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. அது முதல் வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள் வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருடைய கண்களுக்கும பிரத்தியேகமாக பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும், வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருந்தது.

இந்த பாடம் முக்கியமானது ஏனென்றால் விசுவாசிகளின் வாழ்க்கையில் அவர்களின் பாவம் அறிக்கையிடப்படாமல் இருந்தால் கர்த்தரின் பிரசன்னம் அவர்களை விட்டு நீங்கும் என்பதை காட்டுகிறது. கர்த்தரின் பிரசன்னத்தோடு நாம் வாழவில்லையென்றால் நாம் நம்முடைய எதிரிகளால் தோற்கடிக்கப்படுவோம்.

இந்த பாடத்தின் முக்கியமான சத்தியம் என்னவென்றால், தேவனை ஆராதிப்பதற்கான குறிப்பு நாம் அவருக்கு ஏதாவது கொடுப்பதோ அல்லது வழங்குவதோ அல்ல. மாறாக தேவனுடைய பிரசன்னத்தை எப்போதும் நம்முடன் வைத்துக் கொள்வதே ஆகும்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்

1. ஜனங்களோடு நான் கானான் தேசத்திற்கு செல்ல மாட்டேன் என்று கர்த்தர் சொன்னது ஏன்? (6 வினாடிகள் நிற்கவும்)

   “இந்த வழுவிப் போகும் ஜனங்களோடு ஒரு நொடிப் பொழுதாகிலும் இருப்பேனேன்றால் நான் அவர்களை அழித்துப் போடுவேன்” என்று கர்த்தர் சொன்னார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. இஸ்ரவேல் ஜனங்களோடு எது முக்கியமாக இருக்க வேண்டும் என்று மோசே நினைத்தான்? (6 வினாடிகள் நிற்கவும்)

   மோசே கர்த்தரிடம் "நீர் எங்களுக்கு முன்பாகச் செல்லவில்லை என்றால் மற்ற ஜனங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடக் கூடும் என கூறினான்" என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. ஆசரிப்புக் கூடாரம் அமையப் பெற்ற பிறகு கர்த்தர் எவ்வாறு இஸ்ரவேலரை வழி நடத்தினார்? (6 வினாடிகள் நிற்கவும்)

   "வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும் போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணப் புறப்படுவார்கள். மேகம் எழும்பாதிருந்தால், அது எழும்பும் நாள் வரைக்கும் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள்" என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்தப் பாடத்தை இதுவரை கேட்டிராத யாரிடமாவது சொல்லி, அவர்கள் எப்பொழுதாவது கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்திருக்கிறார்களா? அல்லது கிறிஸ்தவர்களோடு கூடுகையில் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறதா? என்று கேளுங்கள்.

"நான் உங்களுடனே எப்பொழுதும் இருப்பேன்" என்ற இயேசுவின் வாக்குத்தத்தத்தை அவருக்கு விவரித்துச் சொல்லுங்கள். நாம் இஸ்ரவேலர்களைப் போல மேகங்களையும், அக்கினி ஸ்தம்பங்களையும்

காண முடியாவிட்டாலும், நாம் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

பாடம் முடிந்தது